මගේ අංකය
எனது இல.
My No. RG/NB/01/பொது

ඔබේ අංකය
உமது இல
Your No.

දුරකතන අංක
தொலைபேசி இல
Telephone Nos 2889488 2889489

ෆැක්ස් අංක
தொலை நகல்
Fax No 2889491 2889492

ඊ-මේල්
மின்னஞ்சல்
E-mail rgd@sltnet.lk

රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

වෙබ් අඩවිය
இணைய தளம்
Web Site www.rgd.gov.lk

තැ.පෙ.අංකය.
த.பெ.இல.
P.O.Box No.

234/ඒ3
ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත
බත්තරමුල්ල
234/ஏ3 டொன்சில் கொப்பேகடுவ மாவத்தை. பத்தரமுல்ல
234/A3
Densil kobbakaduwa Mawatha
Battaramulla

දිනය/திகதி/Date 2019.07.23

(108)

சுற்று நிருபம் இலக்கம்- 11/2019

அனைத்து காணிப் பதிவாளர்கட்கும்,

**<u>உறுதி இரண்டாம் பிரதிக்காக குறை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணத்தினை அறவிடல்</u>**

நொத்தாரிசுகள் எழுதி உறுதிப்படுத்திய உறுதிகளின் இரண்டாம் பிரதிகளுக்காக உரிய முத்திரைக் கட்டணத்தினை செலுத்தாதவிடத்து குறை முத்திரைக் கட்டணம் மற்றும் அதற்கான தண்டப் பணத்தினை அறவிடும் பொழுது, அனைத்துக் காணிப் பதிவகங்களிலும் அதற்காக ஒரு முறையினை கடைப்பிடிக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கணக்காய்வு விசாரணைகளில் அடிக்கடி பதிலினை வழங்குவதற்கு வேண்டியேற்படுகின்றது. இந்தக் கட்டணங்கள் திணைக்களத்திற்குரிய வருமானம் அல்லாததாகையினால் இது சம்பந்தமாக நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொழுது காணிப் பதிவாளர்களுக்கும் செயன்முறை சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆகையினால் மேற்படி விடயம் தொடர்பாக என்னால் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து சுற்றுநிருபங்களினையும் இரத்துச் செய்வதுடன், தொடர்ந்து வரும் காலங்களில் கீழ் குறிப்பிடப்படும் ஒழுங்குவிதிகளினை கடைப்பிடிக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. உறுதிகளின் இரண்டாம் பிரதிகளுக்காக முத்திரைக் கட்டணத்தினை குறைவாக செலுத்தியுள்ளமை தெளிவாகும் ஒவ்வொரு உறுதிகளுக்கும் ஒவ்வொரு மாதத்திற்காகவும் வெவ்வேறு பட்டியலினை தயாரித்து, உரிய உறுதிகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம்/ உரிய மாகாண இறைவரி ஆணையாளருக்கு குறை முத்திரைக் கட்டணம் மற்றும் குறை தண்டப் பணத்தினை அறவிடுவதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என அறிவிக்கின்றேன்.

03. உறுதி இரண்டாம் பிரதிகள் சம்பந்தமாக அறவிட வேண்டிய குறை முத்திரைக் கட்டணம் பற்றி தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் / உரிய மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்படும் அறிக்கையினை மேம்படுத்தல் வேண்டும் என அறிவிக்கின்றேன்.

04. அறவிடப்பட வேண்டிய குறை முத்திரைக் கட்டணத்தினை கீழ் குறிப்பிடப்படும் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஆவணத்தினை உள்ளடக்கி தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் / உரிய மாகாணத்தின் இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கவும்.

| திகதி | நொத்தாரிசின் பெயர் | உறுதி இலக்கம் மற்றும் திகதி | உறுதியின் தன்மை | பெறுமதி | உரிய முத்திரைக் கட்டணம் | செலுத்தப்பட்டிருந்த முத்திரைக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

05. மேற்படி ஆலோசனைக்கு இணங்க நடவடிக்கையினை மேற்கொண்டதான உறுதிப்படுத்தலினை தங்கள் வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், கணக்காய்வில் சமர்ப்பிப்பதற்காக அதற்குரிய கடித கோவைகள் மற்றும் ஆவணங்களினை உரியவாறு பேணுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

06. இந்த சுற்றுநிருபத்தின் திகதி தொடக்கம் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் பிரதியினை பரிசீலனை செய்யும் பொழுது தெளிவாகும் குறை முத்திரைக் கட்டணம் பற்றிய தகவல்களினை அடுத்த மாதத்தின் 10 ந் திகதிக்கு முன்பதாக தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம்/ உரிய மாகாண இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும்.

07. தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் / உரிய மாகாணத்தின் இறைவரி ஆணையாளரினால் உரிய குறை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டதாக தங்களுக்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர், தங்களால் பேணப்படும் குறை முத்திரைக் கட்டணம் ஆவணம் மற்றும் உரிய உறுதியின் இரண்டாம் பிரதியில் அது பற்றி குறிப்பினை இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். குறை முத்திரைக் கட்டணம் ஆவணம் கீழ் குறிப்பிடப்படும் மாதிரிக்கு இணங்க தயாரிக்குக.

| திகதி | நொத்தாரிசு பெயர் | உறுதியின் இலக்கம் மற்றும் திகதி | உறுதியின் தன்மை | பெறுமதி | உரிய முத்திரைக் கட்டணம் | செலுத்தப்பட்டிருந்த முத்திரைக் கட்டணம் | தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் / உரிய மாகாணத்தின் இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி | இரண்டாம் பிரதிக்குரிய குறிப்பு இடப்பட்ட திகதி | விடய எழுதுவினைஞரின் ஒப்பம் | காணிப் பதிவாளரின் ஒப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

08. இற்றைவரை குறை மற்றும் தண்டப் பணத்தினை செலுத்தாத அனைத்து உறுதிகளினதும் இரண்டாம் பிரதிகளினை, உரிய முத்திரைக் கட்டணம் அறவிடுவதற்காக தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் / உரிய மாகாணத்தின் இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி, அந்த குறை தண்ட ஆவணத்தினை 2019/08/31 ந் திகதி மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ என்.சி.விதானகே

பதிவாளர் நாயகம்

பிரதிகள்

01. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு -
02. கணக்காய்வதிபதி -
03. பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம் -
04. தேசிய இறைவரி ஆணையாளர் நாயகம் -
05. அனைத்து மாகாண இறைவரி ஆணையாளர்கள் -
06. வலய பொறுப்பு அனைத்து உதவி பதிவாளர் நாயகங்கட்கு -
07. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கட்கும் -

தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்